நாகப்பட்டினம் வேளாண்மை இணை இயக்குநர் அவர்களின் செயல்முறை ஆணைகள்
முன்னிலை: திரு.ஜ.அக்கண்டராவ் எம்.எஸ்ஸி.,(விவ)எம்.பி.ஏ.,

**எண்:அ2/6056/2021** **நாள்: 07.10.2022**

பொருள்: பணிக்குழு- நியமனம் - தமிழ்நாடு அமைச்சுப்பணி – தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் தொகுதி 4ல் அடங்கிய பணிகள் - நேரடித் தேர்வு 2013-2014, மற்றும் 2014 – 2015ஆம் ஆண்டில் தட்டச்சர் பதவிக்கு தெரிவு செய்யப்பட்டு வேளாண்மைத் துறையில் நியமனம் செய்யப்பட்டவர்கள் - திருமதி ஆர்.மதுஸ்ரீ அவர்களுக்கு தட்டச்சர் பதவியில் பணி வரன்முறை செய்து உத்திரவிடுதல் - சம்பந்தமாக.

பார்வை:
1. சென்னை, வேளாண்மை இயக்குநர் அவர்களின் செயல்முறை ஆணை எண்.அநிபி.3/147565/2015-1, நாள் 30.09.2016.
2. சென்னை, வேளாண்மை இயக்குநர் அவர்களின் கடித எண்.அநிபி.3/14852/2016, நாள் 21.09.2016.
3. செயலர், தலைவர், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அவர்களின் செயல்முறை எண் 14332/CV/2(1) / 2016-11, நாள் 04.07.2022
4. சென்னை வேளாண்மை இயக்குநர் அவர்களது கடிதம் எண். அபபி3/14852/2016 நாள்: 26.07.2022.

**ஆணை:**

பார்வை 1-ல் காணும் சென்னை வேளாண்மை இயக்குனர் அவர்களது செயல்முறை ஆணையின் மூலம் தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் தொகுதி-4ல் அடங்கிய பணிகளுக்கு நேரடித் தேர்வு மூலம் 2013-2014, மற்றும் 2014 – 2015ஆம் ஆண்டில் தட்டச்சர் பதவிக்கு தெரிவு செய்யப்பட்டு, வேளாண்மை துறைக்கு ஒதுக்கீடு செய்ததின்படி, சென்னை வேளாண்மை இயக்குனர் அலுவலகத்தில் காலியாக இருந்த தட்டச்சர் பணியிடத்தில் திருமதி.ஆர்.மதுஸ்ரீ, அவர்களை தட்டச்சராக நியமனம் செய்து பணிநியமனம் வழங்கி உத்திரவிடப்பட்டதின்படி இவர் சென்னை வேளாண்மை இயக்குனர் அலுவலகத்தில் 20.10.2016 முற்பகல் தட்டச்சராக பணியில் சேர்ந்து கொண்டார்..

இந்நிலையில், பார்வை2-ல் காணும் சென்னை வேளாண்மை இயக்குனா அவர்களது கடிதம் மூலம் திருமதி.ஆர்.மதுஸ்ரீ, தட்டச்சருக்கு வழங்கப்பட்ட சாதிச்சான்றின் உண்மைத்தன்மை ஆய்வு செய்து சான்று வழங்கக்கோரப்பட்டது.

...2...

ஆனால், அன்னாரது சாதிச்சான்றின் உண்மைத்தன்மை சான்றுப்பெறப்படாததால், அன்னாருக்கு பணிவரன்முறைப்படுத்தாமல் நிலுவையில் இருந்து வந்தது.

தற்பொழுது பார்வை 3ல் காணும் சென்னை வேளாண்மை இயக்குனர் அவர்களின் கடிதம் மூலம் வரப்பெற்ற சென்னை மாநில கூர்ந்தாய்வு குழு செயல்முறை ஆணையின்படி திருமதி ஆர்.மதுஸ்ரீ அவர்களின் சாதிச்சான்று மெய்தன்மை உடையது என உத்தரவு பெறப்பட்டுள்ளது. மேலும், பார்வை4ல் காணும் சென்னை வேளாண்மை இயக்குனர் அவர்களது கடிதம் மூலம் நடைமுறையில் உள்ள அரசு விதிகளை பின்பற்றி தனியருக்கு பணிவரன்முறை நிறைவு செய்திட நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, திருமதி ஆர்.மதுஸ்ரீ அவர்களுக்கு தட்டச்சர் பதவியில் பணியில் சேர்ந்த நாளான 20.10.2016 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்தும், பணிவரன்முறை செய்யப்பட்ட நாள் முதல் மூன்றாண்டு தொடர் பணிக்காலத்தில் இரண்டு ஆண்டுகள் தகுதிகாண் பருவத்தினை நிறைவு செய்ய வேண்டும் எனவும் உத்தரவிடப்படுகிறது.

ஒம்/- ஜ.அக்கண்டராவ்
வேளாண்மை இணை இயக்குநர்,
நாகப்பட்டினம்.

பெறுநர்:
திருமதி ஆர்.மதுஸ்ரீ, தட்டச்சர்,
க/பெ. திரு. எஸ்.மணிகண்டன்,
எண்7/26, காட்டுநாயக்கன் தெரு, பொறையார், தரங்கம்பாடி தாலுக்கா,
மயிலாடுதுறை மாவட்டம் 609 307.

நகல்: ஆ1 பிரிவு, இவ்வலுவலகம்.
நகல்:- வேளாண்மை இயக்குநர், சென்னை அவர்களுக்கு பணிந்து அனுப்பப்படுகிறது.
நகல்:- 'அ2' இருப்பு கோப்பிற்கு'

// உத்தரவின்படி //

கண்காணிப்பாளர்

10/10/22